# DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 308 / 2018 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 7 |
| Name | திரு.பொன்வேல் |
| Father Name | ஐயாதுரை |
| Village | உமரிகாடு |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 52 |

**(எதிரி ஆஜர் . எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்) )**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 16-10-2025.(நேரம்: 02.51PM )

**முதல்விசாரணை**

1. நான் தற்போது சென்னையில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் சொந்தமாக தொழில் செய்து வருகிறேன்.
3. அசா 4 சதாம் உசேன் அலியை எனக்கு தெரியாது.
4. இவ்வழக்கில் இறந்துபோன மாரிதுரையை எனக்கு தெரியாது.
5. இவ்வழக்கின் எதிரியை எனக்கு தெரியாது,
6. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.
7. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அ.சா 7 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 7ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 13.04.2017 ஆம் தேதி காலை சுமார் 05.15 மணியளவில் TN92A1147 ஈச்சர் பள்ளி வேனை முக்காணி ரவுண்டானா நோக்கி ஓட்டி

சென்றுக்கொண்டிருக்கும்போது ஆறுமுக மங்கலம் ரோட்டில் கிழக்கு நோக்கி TN65H0195 பதிவெண் கொண்ட TVS இருசக்கர வாகனத்தில் பின்னால் மாரிதுரையை அமர வைத்து இவ்வழக்கின் எதிரி அதிவேகமாகவும், ஆஜாக்கிரதையாகவும் ஓட்டியதில் பள்ளி வேனின் மீது மோதி மாரிதுரைக்கு பலத்த காயம் ஏற்படுத்து இதனால் இறந்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.